# தேசபக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 095 ★06.08.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:095 ★06.08.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai




## ஆன்லைன், செயலி மூலம் மதுபானம் விற்பனை: இன்று முதல் அமலுக்கு வருகிறது

### செயல்பாடுகள் பற்றி விடியோ வெளியீடு

ஆன்லைன் மற்றும் செயலி மூலம் மதுபானம் விற்பனை செய்யும் முறை இன்று முதல் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

ஆன் லைனில் மதுபானம் வாங்குவ து குறித்த விளக்க விடியோவை டாஸ்மாக் நிர்வாகம் வெளியிட்டுள்ளது. தமிழகத்தில் தற்போது 4 ஆயிரம் டாஸ்மாக் கடைகள் இயங்கி வருகின்றன. இந்த கடை களில் எம் ஆர்பிஐ விட கூடுதல் விலைக்கு ம துபானம் விற் கப் படுவதாக தொடர்ந்து குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. இந்த பிரச்சி னையை சரி செய்ய டாஸ்மாக் நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந் நி லையில் மதுபான விற்பனைக்கு தனி செயலி மற்றும் இணைத ளம் இன்று முதல் பயன்பாட்டுக்கு வரவுள்ளதாக டாஸ்மாக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆன்லைனில் எப்படி மது பானம் வாங்குவது என்பது குறித்த விளக்க விடியோ ஒன்றை டாஸ்மாக் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

ஆன்லைன் முன்பதிவுக்கான இணையதளத்தில் நுகர்வோர் முதலில் தங்கள் அருகில் உள்ள கடையை தேர்வு செய்ய வே ண் டு ம். அ தன்பின் தங்களுக்கு தே வை யா ன மது வகையை தேர்வு செய்ய வேண்டும். பணம் செலுத்தும் பக்கத்தில் செல்போன் எண் கொடுத்து ஓ டி பி பெற்று, அதை பதிவு செய்து, பணம் செலுத்த வேண்டும். இதையடுத்து, கியூஆர் குறியீடு கொண்ட ரசீது வரும், அதை நுகர்வோர் டவுன்லோட் செய்து, முன் பதிவு செய்த கடைக்கு சென்று க டை பணியாளரிடம் காண்பிக்க வேண்டும்.

க டை பணியாளர் கடையில் உள்ள கருவி மு லம் முதலில் நுகர்வோரின் ரசிதை ஸ்கேன் செய்வார், பின்னர் நுகர்வோர்பதிவுசெய்துவந்தமதுபானத்தை எடுத்து அதையும் ஸ்கேன் செய்வார், இரண்டும் சரியாக உள்ளது உறுதியான பிறகு ரசீதை பிரின்ட் செய்யும் பக்கம் வ ரும். அதில் ரசீதை பிரின்ட் செய்து மதுபானத்தை நுகர்வோரிடம் வழங்குவார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாபஸ் பெற அன்புமணி வலியுறுத்தல்

பாமக தலைவர் அன்புமணி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் டாஸ்மாக் மது வகைகளை ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்வது நடைமுறைக்கு வரவிருப்பதாகவும், அதற்காக தனி இணைய தளம் தொ டங்கப் பட்டிருப்பதாகவும் வெ ளி யாகியுள்ள செ ய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

இந்த இணையதளத்தின் வாயிலாக த மி ழ் நாட் டின் எந்த மூலையிலிருந்து ம் மொ த் தமுள்ள 4,0 48 மதுக் கடைக ளிலும் என் னென்ன மது வகைகள் உள்ளன.

அ வற்றின் வி லை எவ்வளவு என்பதை க ண்டறிந்து முன்பதிவு செய்ய மு டி யும். இது மது வணிகத்தையும், ம துப் புழக்க த்தையு ம் அதிகரிக்கச் செய்யும். ஆன்லைனில் மதுவை முன் ப தி வு செய் வதை அனுமதிப்பது அரசுக்கு பெ ருமை சேர்க்கா து. எனவே, மதுப்புழக்கத்தை அதிகரிக்கச் செய்யும் மது முன் பதிவு திட்டத்தை தமி ழக அ ரசு கை விட வேண் டும். இ வ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விபத்தில் மரணமடைந்தால் பத்திரிகையாளர்களுக்கு ரூ.2 லட்சம் நிவாரணம்

### தமிழக அரசு அரசாணை வெளியீடு



விபத்தில் உயிரிழக்கும் பத்திரிகையாளர்களுக்கு நலவாரியம் மூலமாக ரூ.2 லட்சம் வரை நிவாரணம் வழங்குவதற்கு தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து செய்தித்துறை செயலர் வே. ரா ஜாரா மன் வெளியிட்ட அரசாணை: பத்திரிகையாளர் நல வாரியக் குழுவின் 8, 9வது கூட்டங்களில் பத் தி ரி கையாள ர்களின் விபத்து மரண நிவாரணம் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், பத்திரிகையாளர் நலவாரிய நிதியில் இருந்து விபத்தால் மரணமடையும் பத்திரிகையாளர்களுக்கு ரூ.2 லட்சம் நி வாரணம் வ ழங்க வும், இந்த த் தொ கையை முதல்வ ரின் பொ து நி வாரண நிதி யில் இருந்து இல்லாமல், நலவாரிய நிதியில் இருந்தே அளிக்க வும் அந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதையேற்று தற்போது அதிகாரப் பூர்வமாக அரசாணையை வெளியிட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அண்ணன் சீர் முதல் 'வெற்றி' திட்டங்கள் வரை; தவெக அரசின் முதல் பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகள் என்னென்ன?

நடப்பு 202627 நிதி ஆண்டுக்கான பொது பட்ஜெட்டை தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன் புதன்கிழமை சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார். இதில், புதிய அறிவிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

ஏ ழைகளுக்காக 'வெற்றி வீடு' திட்டம், பெண்களின் திருமண த்தன்று 8 கிராம் தங்க நாணயம், ஒரு பட்டுப் புடவை வழங்கப்படும், 10,000 பெண்களுக்கு இலவச கறவை மாடுகள், 30,000 பெண்களுக்கு ஆடுகள் வழங்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகள் கவனம் பெற்றுள்ளன. குறிப்பாக 'வெற்றி' என்ற முன்னொட்டு கொண்ட திட்டங்கள் சிலவும் இடம்பெற்றுள்ளன.

2026,27 மொத்த பட்ஜெட் மதிப்பீடு ரூ.3,50,027 கோடி. மாநிலத்துக்கு ரூ.10 லட்சம் கோடி கடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இனி, தவெக அரசின் முதல் பட்ஜெட்டில் கவனம் ஈர்க்கும் சிறப்பு அம்சங்களைப் பார்ப்போம்.

கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதா ரத் திட்டத்தின் கீழ் 'வெற்றி 150' திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 125 நாட்கள் வேலை முடித்த குடும்பங்களுக்கு கூடுதலாக 25 நாட்கள் வேலை வழங்க உறுதி செய்யப்படும். மொத்தம் 150 நாட்கள் வேலைவாய்ப்பு உறுதி செய்ய ஆண்டுதோறும் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு சொந்த வீடு வழங்கும் நோக்கில், 202627ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 'வெற்றி வீடு' திட்டம் அறிவிக்கப்பட்டு உள்ளது.

புதிய மாநில வீட்டுவசதித் திட்டமான 'வெற்றி வீடு' திட்டத்தின் மூலம் வீடு கட்டுவதற்கான மானியம் முந்தைய ஆட்சியில் வழங்கப்பட்ட தொகையைவிட உயர்த்தப்பட்டு, ஒரு வீட்டுக்கு ரூ.5 லட்சம் வழங்கப்படவுள்ளது. முதல் ஆண்டிலேயே 70,000 வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ரூ.3,500 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

அதேபோல், ஊரகப் பகுதிகளில் 30,000 பெண்களுக்கு 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்பு' திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் 5 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கணவரை இழந்த பெண்கள், ஆதரவற்ற பெண்கள், திருநர்கள், மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் 100% மானியத்தில் 5 ஆடுகள் வழங்கப்படும். 30 ஆயிரம் பேர் பயன்பெறும் இத்திட்டம் ரூ.110கோடிசெலவில்நிறைவேற்றப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் தகுதி வாய்ந்த 10 ஆயிரம் பெண்களுக்கு கறவை மாடுகள் விலையி ல்லாமல் வழங்கப்படும். இதற்காக ரூ.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்மூலம் ஊரப் பகுதிகளில் வாழும் பெண்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்படும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்தவும், நிலையான வளர்ச்சியை உறுதி செய்யவும் 'வெற்றி தொழில் முனைவோர் திட்டம்' செயல்படுத்த தமிழ்நாடு 2026 27 பட்ஜெட்டில் ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்லூரி மாணவர்களுக்கு ரூ.2,000 கோடியில் 'வெற்றி மடிக்கணினி திட்டம்' செயல்படுத்தப்படும். இதுதவிர இந்த பட்ஜெட்டில் மகளிரை கவரும் வகையில் அண்ணன் சீர்வரிசை திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெண்களின் திருமணத்தன்று 8 கிராம் தங்க நாணயம், ஒரு பட்டுப் புடவை வழங்கப்படும். இதற்காக ரூ.812 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின்' கீழ் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், தாய்மாமனின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும். இதற்காக ரூ.560 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 'தாய் கேர்' என்ற பெயரில் கருவுற்ற பெண்களுக்கான சேவை மற்றும் உதவி மையங்கள் அமைக்கப்படும். இந்த மையங்களில் கருவுற்ற பெண்கள் அவர்களுடைய மகப்பேறு நாள் நெருங்கும் வேளையில் தங்கியிருந்து பயன் பெறலாம். இந்த மையங்களில், கருவுற்ற பெண்களுக்குக்கட்டணமில்லாமல் உணவு



மற்றும் மருத்துவ உதவிகள், தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும். இத்திட்டத்து க்காக 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக பட்ஜெட்டில் தவெக அறிவித்தது போல் 60 வயது வரையிலான அனைத்துக் குடும்பத் தலைவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.2,500 உரிமைத் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியாகலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. இந்நிலையில், உரிமைத் தொகை உயர்த்துவது பற்றி எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. மாறாக, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்துக்காக ரூ 9,818 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாக மட்டும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, ரூ.139 கோடி ஒதுக்கீட்டில் 10,000 அரசுப் பள்ளிகளில் 'சூப்பர் க்ளீன், சூப்பர் கேம்பஸ்' திட்டம் செயல்படுத்தப்படும்.

அண்ணல் அம்பேத்கர் அயல்நாட்டு கல்வி உதவித் தொகை திட்டம் ரூ.131 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

சென்னையில் விமான நிலையம் கிளாம்பாக்கம், கோயம்பேடு பட்டாபிராம், பூந்தமல்லி சுங்குவார்ச த்திரம் ஆகிய 3 புதிய மெட்ரோ வழித்தடங்களுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யும்.

மாநகர இளைஞர் மற்றும் குடும்ப வீட்டு வசதித் திட்டம் கீழ் MYHOME திட்டம் சென்னைப் பெருநகரத்தில் அறிமுகம் செய்யப்படும். திருநர் நலன் கருதி 5 மாவட்டங்களில் 'அரண்' தங்குமிடங்கள் அமைக்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக மாற்றும் நோக்குடன், பெண்களுக்கு முன்னுரிமை வழங்க மண்ணின் மகள் திட்டம் செயல்படுத்தப்படும்.

அயோத்திதாசப் பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் கீழ் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியுடன் வாழ்க்கைத் தரம் உயர்வை உறுதி செய்ய ரூ. 300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடுகள், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள், வாழ்வாதாரத் திட்டங்கள், சுகாதாரக் கட்டமைப்புகள், கல்வி நலன் சார்ந்த உதவித்தொகைத் திட்டங்கள், பள்ளி மற்றும் விடுதி மேம்பாடு உள்ளிட்ட அடிப்படை வசதி மேம்படுத்தப்பட ரூ.250 கோடி நிதியில் ஆன்றோர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் மேம்பாட்டுக்காக இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு மற்றும் புத்தாக்க நகரமாக 'அறிவகம்' உருவாக்கப்படும். இதில் செயற்கை நுண்ணறிவு பல்கலைக்கழகம், சர்வதேச திறன் மேம்பாட்டு மையம் உள்ளிட்டவை இடம்பெறும் இதற்கான சாத்தியக்கூறு ஆய்வு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மின்சார வாகனங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 20 ஆயிரம் பொது சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களை, குறுந்தொழில் நிறுவனங்களாக உயர்த்தும் நோக்கில் 'சிங்கப்பெண் வலிமைப்படுத்தும் திட்டம்' என்ற புதிய திட்டம் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிலையான தொழில்முனைவோரின் செயல்திறனை வெளிப்படுத்தும் ஒவ்வொரு சுய உதவிக் குழு நிறுவனங்களுக்கும் 5 லட்சம் ரூபாய் முதலீட்டு மானியம் வழங்கப்படும். மேலும், இந்த ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 38,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் தருவதற்கு இலக்கு நிர்ணயிக்க ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், திருவண்ணாமலை, சேலம், கடலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில், அறிவுசார் குறைபாடு உடையோருக்கான அரசு நிறுவனங்கள் 'நம்பிக்கை இல்லம்' என்ற பெயரில் அமைக்கப்படும். இந்நிறுவனங்களில், மூன்று வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குச் சிறப்புக் கல்வி, ஆரம்பகால பயிற்சி சேவைகள், மறுவாழ்வு மற்றும் தொழிற்பயிற்சி வழங்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகள் கவனம் பெற்றுள்ளன. பொதுக் கடன்களை பொறுத்தவரை நடப்பு 202627ம் நிதி ஆண்டில் மொத்தம் ரூ.1,73,445 கோடி கடன் பெறவும், ரூ.51,971 கோடியை திருப்பிச் செலுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் இந்த பட்ஜெட்டை, "திராவிட மாடல் அரசின் ரீமேக் வெர்ஷன். சொன்னதைச் செய்யாத புஸ்வாண பட்ஜெட். ப்ளாஸ்ட் அல்ல வேஸ்ட்" என்று திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

"தவெக அரசு தாக்கல் செய்துள்ள முதல் பட்ஜெட், மக்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யவில்லை. பழைய திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி பெயர் மாற்றம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இந்த பட்ஜெட்டுக்கு பூஜ்ஜியம் மார்க் தான் வழங்க முடியும்" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடுமையாக சாடியுள்ளார்.

## சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் செப்.8 வரை நடைபெறும்: பேரவைத் தலைவர் அறிவிப்பு

ச ட்டப்பேரவையில் நேற்று பொதுபட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, தலைமை ச் செயலகத்தில் பேரவைத் தலைவர் ஜே சி டி பிரபாகர் தலைமையில் அலுவல் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. பின்னர், செய்தியாளர்களிடம் பேரவைத் தலைவர் கூறியதாவது: பேரவையில் நடப்பு ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட் 6ம் தேதி (இன்று) தாக்கல் செய்யப்படுகிறது.

பட்ஜெட் மீதான விவாதம், பதில் உரை 4 நாட்கள் நடைபெறும். 7ம் தேதி (நாளை) மறைந்த முன்னாள் எம்எல்ஏக்கள், முக்கிய பிரமுகர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்படும். தொடர்ந்து, அன்றைய விவாதம் தொடங்கப்படும். 8, 9ம் தேதிகள் (சனி, ஞாயிறு) விடுமுறை. 10 முதல் 12ம் தேதி வரை பட்ஜெட் மீதான விவாதமும், நிறைவு நாளில் அமைச்சர்களின் பதில் உரையும் இடம்பெறும். அரசினர் சட்ட மசோதாக்கள் இருந்தால், ஆய்வு செய்து நிறைவேற்றப்படும்.

அதன்பிறகு, துறை ரீதியான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும், அமைச்சர்களின் பதில் உரையும் ஆக.17 முதல் செப்.8ம் தேதி வரை நடைபெறும். இதில் முதல்வர் விஜய்யின் பதில் உரை செப்.7ம் தேதி இடம்பெறும்.

இருக்கைகளை மாற்றித் தருமாறு சில உறுப்பினர்கள் கோரி உள்ளனர். விதிகளின்படி, கூட்டணிக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றால் அந்த கட்சியின் உறுப்பினராகவே அவர்கள் கருதப்படுவார்கள். அதற்கு ஏற்பவே இருக்கைகளும், பேசுவதற்கு நேரமும் வழங்கப்படும். தனி சின்னத்தில் வெற்றி பெற்றிருந்தால் தனியாக பேச அனுமதி வழங்கப்படும். தற்போதைய நிலவரப்படி பழனிசாமிதான் அதிமுக சட்டப்பேரவைக் குழு தலைவராக உள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

21 நாட்கள் நடைபெறும்: நேற்று (ஆக.5) தொடங்கியுள்ள சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடர் செப்.8ம் தேதி வரை நடைபெற உள்ளது. எனினும், இடைப்பட்ட நாட்களில் வரும் அனைத்து சனி, ஞாயிறும் பேரவை நடைபெறாது. அதே போல, சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆக.13 முதல் 15 வரையும், மிலாடி நபிக்காக ஆக.26ம் தேதியும், கிருஷ்ண ஜெயந்திக்காக செப்.4ம் தேதியும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில், சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் 21 நாட்கள் மட்டுமே நடைபெற உள்ளன.

திருவண்ணாமலையில்

# ஆகஸ்ட் 10 முதல் 12 வரை 12 ஜோதிர்லிங்க தரிசன விழா

## பக்தர்கள் பங்கேற்க இந்து முன்னணி அழைப்பு

திருவண்ணாமலையில் ஆகஸ்ட் 10, 11, 12 ஆகிய மூன்று நாட்களில் 12 ஜோதிர்லிங்க தரிசன விழா மற்றும் பக்தர்கள் தங்கள் கரங்களால் அபிஷேகம் செய்யும் ஆன்



மிக நிகழ்ச்சி நடைபெற வுள்ளதாக இந்து முன்னணி மாநில பொதுச் செயலாளர் டி. மனோகர் தெரிவித்தார்.

திருவண்ணாமலையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியதாவது:

ஆகஸ்ட் 10ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு அருள்மிகு அண்ணாமலையார் கோவில் ராஜ கோபுரம் முன்பிருந்து 12 ஜோதிர்லிங்கங்களின் மாடவீதி உலா நடைபெறுகிறது. இதில் சாதுக்கள், சன்னியாசிகள் மற்றும் சமுதாயப் பெரியோர்கள் பங்கேற்க உள்ளனர். ஊர்வலம் நிறைவடைந்த பின்னர் ஓயாமடத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து பக்தர்கள்தங்கள்கரங்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் நிகழ்ச்சி நடைபெறும்.

ஆகஸ்ட் 11ஆம் தேதி மாலை 5 மணிக்கு சென்னை வாதூர் அடிகளார் தலைமையில் சிவபுராணம் பாராயணம் நடைபெற உள்ளது. ஆகஸ்ட் 12ஆம் தேதி சீனிவாச சிவனடியார் சுவாமிகள்தலைமையில் சிறப்பு பூஜைகள் நடைபெறுவதுடன், இரவு 9 மணி வரை பக்தர்கள் அபிஷேகத்தில் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகஅவர்தெரிவித்தார். மேலும், அண்ணாமலையார் கோவிலில் 16 கால் மண்டபம் வழியாக பக்தர்கள் தரிசனம் செல்ல அனுமதி வழங்க வேண்டும் என்றும், கோவிலில் இடைத்தரகர்களின் செயல்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். திருவண்ணாமலை கோவிலைச் சுற்றியுள்ள திருமடங்கள் மற்றும் குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளைஅகற்றஅரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், உள்ளூர் பக்தர்களுக்காக தனி தரிசனப் பாதை ஏற்படுத்தி தினசரி எளிதில் சுவாமி தரிசனம் செய்ய வசதி ஏற்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அதேபோல், கோவிலுக்கு ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் வருமானம் கிடைத்தாலும், பக்தர்கள் நடந்து செல்லும் பகுதிகளில் போதுமான நடைபாதை மற்றும் மேட்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும், அண்ணாமலையார் கோவிலுக்கு நிரந்தர யானை இல்லாததால் பாரம்பரிய யானை திருமஞ்சன வழிபாடு பாதிக்கப்பட்டுள்ளது; எனவே கோவிலுக்கு உடனடியாக யானை வழங்க தமிழக அரசுநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் இந்து முன்னணி மாநில நிர்வாக உறுப்பினர் மகேஷ், மாவட்ட செயலாளர் சிவா, மாவட்ட செயலாளர் செந்தில், நகரத் தலைவர் சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





# செங்குன்றம் மனோபாலா கல்வி அறக்கட்டளை சார்பில் நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம்

செங்குன்றம எம். மனோபாலா நினைவு தினத்தை முன்னிட்டு மனோபாலாகல்விஅறக்கட்டளை சார்பில் சுமார் 500 பேருக்கு அன்னதானம் 100 நபர்களுக்கு பாய் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி தவெக மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய் பிரபு ஆலோசனையின் பேரில் மாதவரம் தொகுதி செங்குன்றம் பேருந்து நிலையம் எதிரில் மனோபாலா கல்வி அறக்கட்டளை நிறுவனர் மற்றும் தமிழக வெற்றி கழக உறுப்பினர் லயன் இரா.முனுசாமி ஏற்பாட்டில் ஏற்பாட்டில் நடைபெற்றது.

தமிழக வெற்றிக் கழகம் செங்குன்றம் நகர செயலாளர் விஜி, நிர்வாகிகள் சுரேஷ், அன்பு உள்ளம் ஜீலான், ரிஸ்வான், ஷாகுல், பைரவா வினோத், வில்லியம் ஜோசப், சந்தோஷ், ஆசைத்தம்பி, என்.எஸ். உதயா, பிரபு உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தொண்டர் அணி மருத்துவர் எம்.சாய்பாலா அவர்களால் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.



# செங்குன்றம் பேரூராட்சி வண்டிமேட்டில் குடிநீர் பைப் சேதமடைந்து பொதுமக்கள் பாதிப்பு

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி 8வது வார்டுக்குட்பட்ட வண்டிமேடு பகுதியில் அமைந்துள்ள மாப்பிள்ளை 3.0 டீக்கடை முன்பு பொதுமக்களின் வீடுகளுக்குச் செல்லும் குடிநீர் பைப் சேதமடைந்து கடந்த 1 மாதத்திற்கும் மேலாக தண்ணீர் வீணாகி சாலையில் ஆறு போல் ஓடிக் கொண்டிருப்பதோடு குட்டை போல் தேங்கி நிற்கின்றது. இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் பற்றாக்குறையும் சாலை சேதமடையும் வாய்ப்பும் உள்ளது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே பேரூராட்சி நிர்வாகம் குடிநீர் செல்லும் பைப்பை உடனடியாக சரி செய்ய வேண்டுமென்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரி க்கை விடுக்கின்றனர்.

# திருவண்ணாமலையில் குடும்ப அட்டை eKYC சிறப்பு முகாம் ஆக. 8, 9ல் விடுபட்டவர்கள் கட்டாயம் பங்கேற்க ஆட்சியர் அழைப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013ன் கீழ் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளில் இடம்பெ ற்றுள்ள அனைத்து உறுப்பினர்களின் ஆதார் விவரங்களை விரல் ரேகை அடிப்படையில் உறுதிப்படுத்தும் EKYC பணிகளை விரைந்து நிறைவு செய்யும் வகையில், ஆகஸ்ட் 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெற வுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார். மாவட்டத்தில் இதுவரை 93.83 சதவீத EKYC பதிவு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இன்னும் 1,44,339 குடும்ப அட்டை உறுப்பினர்கள்கைரேகைபதிவுசெய்துபுதுப்பிக்கவேண்டியுள்ளது.

இதனால், குடும்ப அட்டையுடன் அருகிலுள்ள நியாய விலைக் கடைக்கு சென்று கைரேகை பதிவு செய்து EKYCஐ கட்டாயம் புதுப்பித்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கைரேகை பதிவு ஆகாதவர்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் தங்களது ஆதார் அட்டையில் விரல் ரேகை மற்றும் கண் (IRIS) பதிவை முதலில் புதுப்பித்த பின்னரே EKYC பதிவு மேற்கொள்ள முடியும். இதற்காக சம்பந்தப்பட்ட வட்டங்களில் செயல்படும் ஆதார் சேவை மையங்களை அணுகி உயிரியல் விவரங்களை புதுப்பித்த பிறகு, குடும்ப அட்டையுடன் நியாய விலைக் கடையில் EKYC பதிவு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆகஸ்ட் 2ஆம் தேதி நடைபெற்ற சிறப்பு முகாமில் பங்கேற்க முடியாதவர்கள், ஆகஸ்ட் 8 (சனிக்கிழமை) மற்றும் ஆகஸ்ட் 9 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும்சிறப்புமுகாம்களில்தவறாமல்கலந்துகொண்டு EKYC பதிவை நிறைவு செய்து அரசின் நலத்திட்டங்களை தொடர்ந்து பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.

இறப்புக்கு முன் ரத்த தானம்
இறப்புக்கு பின் கண் தானம்

# செங்குன்றம் எம்.ஏ. நகர் சோதனைச் சாவடியில் 12 கிலோ கஞ்சா பறிமுதல் : மூன்று குற்றவாளிகள் கைது

ஆவடி காவல் ஆணையரகத்தில் போதைப்பொருள் இல்லா தமிழகம் என்ற கோட்பாட்டை வலியுறுத்திஆவடிகாவல்



ஆணையாளர் செந்தில்குமார் உத்தரவுபடியும், காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர்.சிவகுமார் மேற்பார்வையில், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் உதவி ஆணையாளர் களியசுந்தரம் வழிகாட்டுதலின் படியும் செங்குன்றம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் ஜமீஸ் பாபு தலைமையிலான போலீசார் திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் எம்.ஏ. நகர் சோதனை சாவடி அருகில் தணிக்கை பணி மேற்கொண்டு பட்டுக்கோட்டை ராஜேஷ், மயிலாடுதுறை மாவட்டம் சிவசங்கரன் (வ/24), எழிலரசன், (வ/24), ஆகியோரிடம் விசாரணை செய்து குற்றவாளிகள் வைத்திருந்த மூன்று ஷோல்டர் பைகளை சோதனை செய்ததில் 12 கிலோகிராம் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து கஞ்சாவை கைப்பற்றி குற்றவாளி களை கைது செய்து செங்குன்றம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் வழக்குபதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

திருவண்ணாமலையில்

# கமுதி கூட்டுறவு சார்பதிவாளர் பணிநீக்கத்தை கண்டித்து கூட்டுறவு ஊழியர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

கமுதி கூட்டுறவு சார்பதிவாளர் பணிநீக்கத்தை கண்டித்து திருவண்ணாமலையில் கூட்டுறவு ஊழியர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில்கூட்டுறவு சார்பதிவாளராக பணியாற்றி வந்த வேல்முருகனை தற்காலிகமாக பணிநீக்கம் செய்ததை கண்டித்து, தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம் சார்பில் மாநிலம் முழுவதும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் திருவண்ணாமலை மாவட்ட மையம் சார்பில், திருவண்ணாமலை மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம் முன்பு திங்கள்கிழமை (03.08.2026) கண்டன மற்றும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், வேல்முருகன் மீது மேற்கொள்ளப்பட்ட தற்காலிக பணிநீக்க நடவடிக்கையை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் கூட்டுறவுத்துறை ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.



## கே ஜி எஃப் உரிகம் ரயில்வே நிலையத்தில் இரண்டு நாட்களாக பசியுடன் சுற்றித்திரிந்த

# ஆதரவற்ற பெண்மணியை மனிதநேயத்துடன் மீட்டு பங்காருபேட்டை ஆதரவு இல்லத்தில் சேர்த்தார்

## உறிகம் காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரிக்கு பொதுமக்கள் பாராட்டு

காவல்துறைஎன்றாலே சட்டம்ஒழுங்கை பாதுகாக்கும் துறை என்ற எண்ணம் பலருக்கும் இருக்கும். ஆனால், மனிதநேயம் நிறைந்த காவல் அதிகாரிகள், துயரத்தில் இருக்கும் மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கையை மீண்டும் விதைக்கிறார்கள். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறார் கே.ஜி.எஃப் உறிகம் காவல்நிலையசப்இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி. உரிகம் ரயில்வே நிலையத்தில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் தொடர்ந்து இரண்டு நாட்களாக பசியாலும், ஆதரவற்ற நிலையிலும் அங்கும் இங்கும் சுற்றித்திரிந்து ள்ளார். அவரைக் கண்ட பொதுமக்கள் மனவேதனை அடைந்து காவல் துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவல் கிடைத்தவுடன் உறிகம் காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, அந்த பெண்மணியை பாதுகாப்பாக மீட்டார். அவரிடம் மிகவும் அன்பாகவும், பொறுமையாகவும் பேசி அவரது நிலை குறித்து விசாரித்தார்.

விசாரணையில், சில நாட்களுக்கு முன்பு தனது மகனே தன்னை கைவிட்டு சென்றுவிட்டதாகவும், அதன் பிறகு உணவின்றியும், பாதுகாப்பான இடமின்றியும் தவித்து வந்ததாகவும் அந்த பெண்மணி கண்ணீருடன் தெரிவித்தார்.

அவரது நிலையைப் புரிந்துகொண்ட சப் இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி, உடனடியாக அவருக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்தார். பின்னர் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அதிகாரப்பூர்வ நடைமுறைகளைப் பின்பற்றி அந்த பெண்மணியை பங்காருபேட்டை ஆதரவு இல்லத்தில் பாதுகாப்பாக சேர்த்தார்.

இன்று அந்த பெண்மணி பாதுகாப்பான சூழலில் பராமரிக்கப்பட்டு வருகிறார்.

பசியால் வாடி, யாரும் இல்லாமல் தவித்த ஒருவருக்கு மீண்டும் வாழ்வதற்கான நம்பிக்கையை ஏற்படுத்திய இந்த மனிதநேய செயல், சமூகத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இன்றைய காலத்தில் வயதான பெற்றோர்களையும் ஆதரவற்றவர்களையும் கைவிடும் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், ஒரு காவல் அதிகாரி தனது கடமையைத் தாண்டி மனிதநேயத்துடன் செயல்பட்டிருப்பது அனைவரையும் நெகிழ வைத்துள்ளது.

உரிகம் காவல் நிலைய காவல்துறையினரின் இந்த மனிதாபிமான பணியை பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள்வெகுவாகப்பாராட்டி வருகின்றனர். "இது போன்ற காவல் அதிகாரிகளே சமூகத்தின் உண்மையான காவலர்கள்" என்று பலரும் தங்கள் கருத்துகளை பகிர்ந்து வருகின்றனர்.

பசியால் வாடிய ஒரு ஆதரவற்ற பெண்மணியின் வாழ்க்கையில் மீண்டும் ஒளியை ஏற்றியுள்ளார் உறிகம் காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி.

சட்டத்தை மட்டுமல்ல, மனிதநேயத்தையும் காக்கும் காவல் அதிகாரிகள்தான் சமூகத்தின் உண்மையான ஹீரோக்கள். ஒரு தாயின் கண்ணீரைத் துடைத்து, அவருக்கு பாதுகாப்பான வாழ்க்கையை ஏற்படுத்திய சப்இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரியின் இந்த மனிதநேயச் செயல் என்றும் நினைவுகூரப்படும்.




திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டபாணி மடத்துக்கு சொந்தமான ரூ.100 கோடி சொத்து மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு 4 பேரை 3 நாட்கள் சிபிசிஜடி போலீசார் காவலில் எடுத்து விசாரிக்க திண்டுக்கல் நீதிமன்றம் நிபந்தனையுடன் ஒப்புதல்.




மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில்
பெருநிறுவன சமூக பங்களிப்பு நிதித்திட்டத்தின் கீழ்

## 492 மனவளர்ச்சி குன்றிய மாணவமாணவியர்களுக்கு ரூ.45.37 இலட்சம் மதிப்பீட்டில் கற்றல் திறனை ஊக்குவிப்பு தொகுப்புகள்

### திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா வழங்கினார்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு குறை தீர்வு கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பெருநிறுவன சமூக பங்களிப்பு நிதித் திட்டத்தின் கீழ் 492 மனவளர்ச்சி குன்றிய மாணவ மாணவியர்களுக்கு ரூ.45.37 இலட்சம் மதிப்பீட்டில் கற்றல் திறனை ஊக்குவிப்பு தொகுப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குமார், வடசென்னை அனல் மின் நிலைய துணை பொது மேலாளர் ராமமனோகர், முதுநிலை மேலாளர் சுந்தரி பாப்பு, மனிதவள மேலாண்மை அலுவலர் மாளவிகா லிஸ் ஜார்ஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

தொழில் தொடங்க விரும்புவோருக்கு அரிய வாய்ப்பு:

## 75% கல்விக் கட்டண உதவியுடன் தொழில் முனைவோர் பயிற்சி

### திருவண்ணாமலை ஆட்சியர் அறிவிப்பு

தமிழ்நாடு தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDIITN), அகமதாபாத் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்துடன் (EDII) இணைந்து நடத்தும் "தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்கம்" (CERTIFICATE COURSE ON ENTREPRENEURSHIP AND INNOVATION) சான்றிதழ் பயிற்சியின் மூன்றாவது தொகுப்பு ஆகஸ்ட் 3 முதல் தொடங்கியுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

21 முதல் 40 வயதுக் குட்பட்ட பட்டதாரிகள் மற்றும் ஐ.டி.ஐ. (ITI) முடித்த இளைஞர்கள் இப்பயிற்சியில் சேர தகுதியுடையவர்கள். தொழில் தொடங்கும் திறன், புதுமையான சிந்தனை, தொழில் மேலாண்மை மற்றும் தொழில் முனைவு திறன்களை மேம்படுத்தும் வகையில் இந்தப் பயிற்சி வடிவமைக்கப் பட்டுள்ளது.

தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு கல்விக் கட்டணத்தில் 75 சதவீதம் வரை உதவித்தொகை வழங்கப்படும் என்றும், இளைஞர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தொழில் முனைவோராக உருவாக முன்வர வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

பயிற்சியில் சேர விரும்புவோர் HTTPS://EDITN.IN/WEBONEYEAR REGISTRATION என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். மேலும் தகவல்களுக்கு WWW.EDITN.IN இணையதளத்தைப் பார்வையிடலாம் அல்லது 86681 01638 / 86681 07552 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அறிவித்துள்ளார்.


பாடியநல்லூர் ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில்

## 29ம் ஆண்டு ஆடிதிருவிழா; 9ம் ஆண்டு தீமிதி திருவிழா

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் காலனி அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் 29ஆம் ஆண்டு ஆடிதிருவிழா மற்றும் 9ஆம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் தலைவர் கோவிந்தசாமி, செயலாளர் ஆலயசாமி, பொருளாளர் தேவராஜ், துணைத்தலைவர்கள் பரசுராமன், ஆலயசாமி, முனுசாமி, பார்த்திபன் துணை செயலாளர்கள் ஆலயசாமி, திருமலை உள்ளிட்ட ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் பந்தகால் நடுதல், பால்குடம் எடுத்தல், காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், கங்கை நீர் திரட்டுதல், அக்னி கப்பறை எடுத்தல் போன்றவை நடைபெற்றது.





பின்னர் சுமார் 200க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இரங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.

இத்திருவிழாவிற்கு ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொது மக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் அம்மனுக்கு சுமங்கலி பூஜை, கும்பம் படையல்பூஜை நடைபெற்றது.



ஏகலைவா மாதிரி பள்ளியில்

## 13 தொகுப்பூதிய பணியிடங்கள்: விண்ணப்பிக்க ஆக.10 வரை அவகாசம் நீட்டிப்பு

### திருவண்ணாமலை ஆட்சியர் அறிவிப்பு

திருவண்ணாமலை மாவட்டம் புளியம்பட்டியில் செயல்பட்டு வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள 13 தொகுப்பூதிய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்டிருந்த காலக்கெடு ஆகஸ்ட் 10 ஆம் தேதி வரை நீட்டிக்கப்ப ட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

2026–27 கல்வியாண்டிற்காக பள்ளியில் காலியாக உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர் (SPOKEN ENGLISH), இளநிலை ஆசிரியர் (SPOKEN ENGLISH), கலை ஆசிரியர், இசை ஆசிரியர், ஆலோசகர், செவிலியர், இளநிலைச் செயலக உதவியாளர், ஓட்டுநர், மின்சாரம் மற்றும் குழாய் பராமரிப்பு பணியாளர், தோட்டக்காரர், உணவுக்கூட உதவியாளர் உள்ளிட்ட 13 பணியிடங்கள் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன.

பணியிடங்களைப் பொறுத்து மாதந்தோறும் ரூ.10,000 முதல் ரூ.18,000 வரை தொகுப்பூதியம் வழங்கப்படும். தேர்வு செய்யப்படும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதோர் 2026–27 கல்வியாண்டு நிறைவடையும் வரை மட்டுமே தற்காலிக அடிப்படையில் பணியாற்றுவார்கள் என்றும், பணித்திறன் மற்றும் நிர்வாக ஒழுங்கு தொடர்பான குறைபாடுகள் இருந்தால் முன்னறிவிப்பின்றி பணி நீக்கம் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆகஸ்ட் 3ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பணிநாடுநர்களின் நலனை கருத்தில்கொண்டு விண்ணப்பிக்கும் கால அவகாசம் ஆகஸ்ட் 10ஆம் தேதி வரை நீட்டிக்க ப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ண ப்பங்களை "ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி, புளியம்பட்டி, திருவண்ணாமலை மாவட்டம்" என்ற முகவரிக்கு ஆகஸ்ட் 10ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அறிவுறுத்தியுள்ளார்.



## சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கம் சார்பில் அங்கன்வாடி மையத்திற்கு புதிய மின்விசிறி

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தீர்த்தக்கிரியம்பட்டு மேட்டுப் பகுதியில் அங்கன்வாடிமையம்இயங்கி வருகின்றது. இந்த மையத்தில் 2 முதல் 4 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயின்று வருகின்றனர். இந்த அங்கன்வாடியில் மின்விசிறி வசதி இல்லையென்று அங்கன்வாடி நிர்வாகிகள் கூறியதை யடுத்து சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவர் லயன் எம். முகம்மது அபுபக்கர் உடனடியாகபுதியமின்விசிறியை அங்கன்வாடி நிர்வாகிகளிடம் வழங்கினார். இதில் தவெக தீர்த்தக்கிரியம்பட்டு செயலாளர் தியாகு, தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி உதவியாளர் சதீஷ், அங்கன்வாடி நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

கே.ஜி.எஃப் வரலாற்றில் புதிய மைல்கல்... அம்பேத்கர் வெண்கலச் சிலை திறப்பு:

## 25 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க உறுதி அளித்த எம்.எல்.ஏ. ரூப்சசிதர்

கேஜிஎப் நகரசபை வளாகத்தில், இந்திய அரசியலமைப்பின் முதன்மைச்சிற்பியும், சமூக நீதியின் அடையாளமுமான டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் புதிய வெண்கலச் சிலை இன்று கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள், சமூக அமைப்புகள், அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழா, கே.ஜி.எஃப் வரலாற்றில் முக்கியமான நிகழ்வாக அமைந்தது.



விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கே.ஜி.எஃப் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ரூப்சசிதர், வெண்கலச் சிலையை திறந்து வைத்து உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், "டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் உலகின் மிகச்சிறந்த அரசியலமைப்பை இந்தியாவுக்கு வழங்கிய மகத்தான தலைவர். சமூக நீதி, சமத்துவம் மற்றும் மனித உரிமைகளுக்காக தனது வாழ்நாள் முழுவதும் போராடியவர். பெண்களுக்கு கல்வி, சம உரிமை மற்றும் இடஒதுக்கீடு கிடைக்க அம்பேத்கர் மேற்கொண்ட பங்களிப்பு என்றும் மறக்க முடியாதது" என்று தெரிவித்தார்.

மேலும், கே.ஜி.எஃப் தொகுதியில் அம்பேத்கரின் முதல் வெண்கலச் சிலையை திறந்து வைக்கும் வாய்ப்பு கிடைத்தது தனக்கு பெருமை அளிப்பதாகவும், பல்வேறு தலித் அமைப்புகள், அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் நீண்ட காலமாக முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இந்தச் சிலை நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து, கே.ஜி.எஃப் தொகுதியின் எதிர்கால வளர்ச்சியைப் பற்றியும் அவர் முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.

B G M L தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டு பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருந்த நிலம் மீட்கப்பட்டுள்ளதாகவும், அந்த இடத்தில் பெரிய தொழிற்துறை மையம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அந்தநிலத்தைதொழில் வளர்ச்சிக்குத் தயார்படுத்தும் பணிக்காக கே.ஐ.ஏ.டி.பி. துறையின் மூலம் தேவையான மானியங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், பல முன்னணி நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வந்துள்ளதாகவும் அவர் கூறினார். வரும் காலங்களில் புதிய தொழிற்சாலைகள் செயல்பாட்டுக்கு வந்தவுடன், சுமார் 25 ஆயிரம் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்ற உறுதியையும் எம்.எல்.ஏ. ரூப்சசிதர்வழங்கினார்.

இது கே.ஜி.எஃப் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் அறிவிப்பாக பொதுமக்களால் வரவேற்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாநகராட்சியின் 35 வார்டுகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று, அம்பேத்கர் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்தவிழாவில்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவன்ஷு ராஜ்புத், நகராட்சி ஆணையர் ஸ்ரீதர், நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தலைவர் சீனிவாசன், ஆணையர் தமேந்திரா, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அதிகாரி ராஜேஷ், வட்டாட்சியர் காயத்ரி, உதவிப் பொறியாளர் கிரண் உள்ளிட்ட பல்வேறு அரசு அதிகாரிகள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

சமூக நீதியின் சின்னமாக விளங்கும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் வெண்கலச்சிலைதிறப்பு விழா மட்டுமல்லாமல், கே.ஜி.எஃப் இளைஞர்களின் எதிர்காலத்தை மாற்றும் வகையில் 25 ஆயிரம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் இலக்கை அறிவித்திருப்பது, இப்பகுதியின் வளர்ச்சிப் பயணத்தில் ஒரு புதிய அத்தியாயமாக பார்க்கப்படுகிறது.







## தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரியக்கம் சார்பாக வணிகர்ளுக்கான விழிப்புணர்வு முகாம்

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரியக்கம், இந்திய சில்லறை விற்பனையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (எஃப்ஆர்ஏஐ) சார்பில் 'நவீன சந்தையில் சட்ட விரோத வர்த்தகத்தை எதிர்கொள்ளுதல்' என்ற தலைப்பில் கருத்தரங்கமும் வணிகர்களுக்கான விழிப்புணர்வு முகாமும் மாதவரம் இரவுண்டானா அருகில் அமைந்துள்ள விஜய் பார்க் ஹோட்டலில் மாநிலத் தலைவர் செல்லதுரை தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரியக்க தலைமை சட்டஆலோசகர் ஆர்.டில்லிபாபு அனைவரையும் வரவேற்றார். மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல்.விஜய்பிரபு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றும்பொழுது, பொதுமக்களின் நலனில் வணிகர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. ஏனெனில் அவர்கள் அனைத்து தரப்பு மக்களுடன் எளிதாக பழகக் கூடிய சூழ்நிலையில் உள்ளனர். தமிழக அரசின் விதிளுக்கு கட்டுப்பட்டு செயல்படும் அனைத்து வணிகர்களுக்கும் வளர்ச்சி உண்டு.

பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் நலனுக்காக தவெக அரசு என்றும் துணை நிற்கும் என்றார். தமிழ்நாடு வணிகர் சங்கச் செயலர் மெஸ்மர் காந்தன் வெள்ளையன் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். மாநிலச் செயலாளர் ஜெயினுலாபுதீன் அனைவருக்கும் நன்றி நவின்றார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரியக்க தேசிய செயலாளர் ஜி.அன்பரசன், துணைத் தலைவர் தா.தேவன்பு, பொருளாளர் எஸ்.பகவான், உள்ளிட்டோர் 100க்கும் மேற்பட்ட வணிகர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட வணிகர்களிடம் தரமான பொருட்களை விற்பனை செய்ய வேண்டும்; அரசு தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என்பதை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பெயர் இயக்கம் வலியுறுத்தியது.

தேசபக்தி





திருவண்ணாமலையில் தேசிய நுகர்வோர் தின விழாவில்

# நுகர்வோர் உரிமைகளை அறிந்தாலே ஏமாற்றங்களைத் தடுக்க முடியும்

## ஆட்சியர் வந்தனா கார்க் வலியுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த நுகர்வோர் விழிப்புணர்வு கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைப்பதன் அவசியம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர், நுகர்வோர் உரிமைகள் குறித்து பொது மக்கள் விழிப்புணர்வுடன் இருப்பதே தரமற்ற பொருட்கள், கலப்பட உணவுப்பொருட்கள் மற்றும் நியாயமற்ற வணிக நடைமுறைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சிறந்த வழி என்று தெரிவித்தார். ஒரு பொருளை வாங்கும் முன் அதன் விலை, தயாரிப்புவிவரம், தரச்சான்று, காலாவதி தேதி உள்ளிட்ட தகவல்களை முழுமையாக சரிபார்த்து வாங்கும் பழக்கத்தை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் வழங்கியுள்ள பாதுகாப்பு உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்வு செய்யும் உரிமை, குறைதீர்வு பெறும் உரிமை, நுகர்வோர் கல்விக்கான உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் குறித்து அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

கலப்பட உணவுப் பொருட்களை தவிர்த்து தரமான உணவுகளை பயன்படுத்துவதன் மூலம் உடல்நலத்தை பாதுகாக்க முடியும் என்றும், நுகர்வோர் சங்கங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் கலப்பட உணவுகளின் தீமைகள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் குறித்து விரிவான விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

விழாவின் ஒரு பகுதியாக, 2025–26 ஆம் ஆண்டுக்கான தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள்தினத்தை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப்பட்ட ஓவியம், கவிதை, கட்டுரை உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

மேலும், மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட குடிமக்கள் நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுஜாதா, கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் வினோத், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் நியமன அலுவலர் பானு சுஜாதா, திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவை சங்கத் தலைவர் சுவாமிநாதன், நுகர்வோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ATK ஆறுமுக கிருஷ்ணன், தலைமையில்

# தவெக தலைவரான தமிழக முதலமைச்சரை இழிவாக பேசிய திமுக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

தவெக தலைவரான தமிழக முதலமைச்சரை இழிவாக பேசிய திமுக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை கண்டித்து ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ATK ஆறுமுக கிருஷ்ணன், தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

தூத்துக்குடி புறநகர் மாவட்ட ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியத்தின் சார்பில் புதியம்புத்தூர் பேருந்து நிலையம், முன்பு தமிழக வெற்றி கழக தலைவர் மக்கள் போற்றும் முதலமைச்சர் ஜோசப் விஜயை இழிவு படுத்தி பேசிய திமுக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை கண்டித்து, தூத்துக்குடி புறநகர் தவெக மாவட்ட செயலாளரும் சிறு குறு தொழில்துறை அமைச்சருமான மதன் ராஜா, ஆலோசனைப்படி ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ATK.ஆறுமுக கிருஷ்ணன், தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்






முரா, நிர்மல் சிங், மாவட்ட கழக நிர்வாகிகள் வசந்தி, மணிகண்டன் மாவட்ட கழக பேச்சாளர் சிம்சோன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் கருங்குளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மாரி செல்வம் அவர்களுடன் முத்துச்சாமி முத்தரசன் அந்தோணி பிரான்சிஸ் கனகராஜ் பொன்முருகன் கணேஷ் ஆர்ப்பாட்ட ஒருங்கிணைப்பாளர் ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயற்குழு நிர்வாகி G.ராதாகிருஷ்ணன் செய்திருந்தார் இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மகளிர் அணி உட்பட தவெகவினர் கலந்து கொண்டனர்

பாடியநல்லூர் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா:

# சே.முத்துக்குமார் குடும்பத்தினர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம்



மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் அருள் மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய 84ஆம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழாவை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக மாண வரணி துணை அமைப்பாளரும் ஜோதிநகர் கிளை செயலாளருமான சே.முத்துக்குமார் குடும்பத்தினர்கள் ஏற்பாட்டில் சுற்றுவட்டார பக்தர்கள்மற்றும்கிராம பொது மக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து பின்னர் வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு மஹாதீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக மாணவரணி துணை அமைப்பாளரும் ஜோதிநகர் கிளை செயலாளருமான சே.முத்துக்குமார் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டு ஆலய நிர்வாகிகள் முன்னிலையில் சுமார் 2000 க்கும் மேற்பட்ட சுற்று வட்டார பக்தர்கள் மற்றும் கிராம பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதான நிகழ்ச்சியினை துவக்கி வைத்தனர்.

# ‘அரசு ஊழியர்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் தமிழக பட்ஜெட்’

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம் கருத்து



202627ம் ஆண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கை குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் சிறப்பு தலைவர் கு.பாலசுப்ரமணியன் விடுத்துள்ள அறிக்கையில், “தமிழகத்தில் அமைந்துள்ள புதிய அரசு 202627ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையில் தேர்தல் கால வாக்குறுதிகளான பழைய ஓய்வூதிய திட்டம், 5 ஆண்டுகள் தற்காலிகமாக பணியாற்றியிருந்தால் பணி நிரந்தரம் உள்ளிட்ட அரசுப்பணியாளர்களின் எந்த கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை.

அதனால், அரசுப் பணியாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

எனவே, இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே இக்கோரிக்கைகள் குறித்து அறிவிப்புகள் வெளியிட வேண்டும்.

இந்த அறிக்கையில் நேர்மையான, ஊழல் இல்லாத அரசு நிர்வாகமும், நேர்மையான பணி நியமனங்கள், இடமாறுதல், பதவி உயர்வுகள் நடைமுறைப்படுத்தப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம் வரவேற்கிறது.

இந்த விஷயத்தில் தொடர்ந்து அரசு உறுதிப்பாட்டுடன் இருக்க வேண்டுமென விரும்புகிறோம்.

புதிய அரசு அண்மையில் அரசுப் பணியாளர்களுக்கும், ஓய்வுபெற்ற அரசுப் பணியாளர்களுக்கு வெளியிட்டுள்ள மருத்துவ காப்பீடு திட்டத்தில் உள்ள குறைகளை போக்குவதற்கு அனைத்துசங்கங்களையும்அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “தவெக அரசின் பட்ஜெட்டில் ‘பெயர் மாற்றம்’ மட்டுமே உள்ளது” உதயநிதி விமர்சனம்

“100 நாளில் தவெக அரசின் மதிப்பெண் என்ன என்று யாரிடம் கேட்டாலும் பெரிய பூஜ்ஜியம் என சொல்வார்கள். அதேபோல் தான் இன்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டும் பூஜ்ஜியம் மதிப்பெண்ணை பெற்றுள்ளது. ஆட்சிக்கு வரும்போது மாற்றம் என்றார்கள். என்ன மாற்றம் என்றால் ‘பெயர்மாற்றம்’ தான்” என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் இன்று கூறும்போது, “கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டியுள்ளார்கள். ஆட்சிக்கு வரும் போது மாற்றம் என்றார்கள். என்ன மாற்றம் என்றால் ‘பெயர்மாற்றம்’ தான். அனைத்து திட்டத்தின் பெயரையும் மாற்றியுள்ளார்கள். கலைஞர் மகளிர் உரிமை தொகையை உயர்த்தி தருவதாக சொன்னார்கள். ஆனால் அதைப் பற்றி அவர்கள் வாயே திறக்கவில்லை.

ஒவ்வொரு துறையை பற்றியும் நிதியமைச்சர் மரிய வில்சன் பேசும் போது இந்தியாவிலேயே தமிழகம் முன்னணி மாநிலமாக இருக்கிறது என்று கூறினார். ஒரு வழியாக திராவிட மாடல் அரசின் சாதனைகளை எல்லாம் இப்போதாவது ஒப்புக்கொண்டுள்ளார்களே. அதற்கு நிதியமைச்சர் மற்றும் முதல்வருக்கு நன்றி.

மக்கள் பிரச்சினைகள் குறித்து இக்கூட்டத் தொடர் முழுவதும் திமுக கேள்வி எழுப்பிக் கொண்டே இருக்கும். எங்களின் கேள்விகளுக்கெல்லாம் தவெக அரசு பதில் சொல்லத் தயாராக இருக்க வேண்டும்.

‘அன்பு சோலை’ என நாங்கள் கொண்டு வந்த திட்டத்துக்கு ‘முதியோர் பொழுதுபோக்குமையங்கள்’ என்றும் ‘உலகம் உங்கள் கையில்’ என்ற லேப்டாப் திட்டத்துக்கு ‘வெற்றி மடிக்கணினி திட்டம்’ என்றும் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்துக்கு ‘வெற்றி வீடு திட்டம்’ என்றும் ‘முதல்வர் படிப்பகங்கள்’ திட்டத்துக்கு ‘டிஜிட்டல் நூலகம்’ என்றும் ‘நன்னிலம்’ திட்டத்துக்கு ‘மண்ணின் மகள் திட்டம்’ என்றும் பெயரை மாற்றியிருக்கிறார்கள். காவிரியில் தண்ணீர் வரவில்லை. ஆடி 18ல் கூட தமிழ்நாட்டு ஆறுகளில் தண்ணீர் வராத ஒருநிலையைதான் தவெக அரசு உருவாக்கியுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, இந்த ஜூலையில் காவிரிநீர்வரத்துகுறைந்து காணப்படுவதாக, நாளிதழ் ஒன்றில் கட்டுரை வெளியாகியுள்ளது.



இந்த ஆட்சி அமைந்ததில் அதிகம்’ பாதிக்கப்பட்டுள்ளது விவசாயிகள் தான். தஞ்சையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் இந்த பிரச்சினைகளை நான் பேசினேன், அதற்காக என்னை வீடு புகுந்து கைது செய்தார்கள். விவசாய பிரச்சினைகளை மடைமாற்றவே இந்த கைது நடவடிக்கை நடந்தது. மேகேதாட்டுவில் அணை கட்டும் கர்நாடகாவை தடுக்க வக்கில்லாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது.

தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. கடந்த 5 வாரங்களில் 4 காவல் மரணங்கள் நடந்துள்ளன. 5 சாதி ஆணவக் கொலைகள் நடந்துள்ளன.

தமிழகத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து கேள்வி எழுப்பினால், முதல்வர் பதிலளிக்க மாட்டார்; முதல்வருக்கு பதில் பொதுப் பணித்துறை அமைச்சர் தான் பதில் சொல்வார் என முதல்வருக்கு முன் ஜாமீன் வாங்குகிறார். இதுபோன்ற நகைச்சுவையை இந்திய ஜனநாயகம், எந்த சட்டமன்றத்திலும் பார்த்திருக்காது.

மக்களுக்கான திட்டங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான காலக்கெடு என முக்கிய அம்சங்கள் ஏதுமின்றி, திருத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறது தவெக அரசு” என்று அவர் தெரிவித்துள்ளார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA